2013 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2013), மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு எண் 22/2013)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன சொல்கிறீர்கள்? உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் இருக்கக்கூடிய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் பெரிய அளவிற்கு ஜீவ நதிகள் எதுவும் இல்லாத வேளையில் நிலத்தடி நீர் மட்டும்தான் குடிநீர் மற்றும் விவசாயத்திற்குப் பிரதானமான ஆதாரமாக விளங்கக்கூடிய

@ 25-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி][2013 அக்டோபர் 30

வேளையில் ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு இதே அரசால் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் மேலாண்மைச் சட்டத்தினை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அந்தச் சட்டத்தினை இப்பொழுது நீக்கறவு செய்வதற்கு என்னுடைய கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—25

ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் இந்த அவையில் வைக்கவிரும்புகிறேன். இந்தியாவினுடைய நிலத்தடி நீர் மேம்பாட்டு ஆணையத்தின் வாயிலாக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய வெப்சைட்டில் குறிப்பிட்டபடி 2012–க்கும் 2013–க்கும் இடையில் ஒரே ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில் நான்கே நான்கு மாவட்டங்களில்தான் 2012–க்கும் 2013–க்கும் இடையே நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. மீதி இருக்கக்கூடிய 28 மாவட்டங்களில் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துள்ளது. எனவே, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு—இப்போது இருக்கக்கூடிய பெரிய ஆபத்தே பெரிய, பெரிய ஆழ்க்குழாய்கள்மூலமாக பெரிய, பெரிய தொழிற்சாலைகள் மற்றும் அவற்றைத் தவறுதலாக பயன்படுத்தக்கூடிய போக்கு வளர்ந்திருக்கக்கூடிய இந்தவேளையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அந்தச் சட்டத்தை நீக்கியிருப்பது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. ஒரு வலுவான சட்டத்தை–– அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தை நீக்கியிருந்தால் சரியாக இருந்திருக்கும். எனவே, இந்தச் சட்டத்தை நீக்குவதைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் ஆட்சேபித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடிநீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(எ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

@ 28-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.